1972 மார்ச் 20]

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, பஸ்களில் இப்படி வாசகங்கள் எழுதுவது டிரைவர்களுக்கா, கண்டக்டர்களுக்கா, அல்லது பயணிகளுக்கா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லோருக்கும் தான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பல அரசுப் பேருந்துகளில் திருவள்ளுவர் படம் சரியாக இருப்பதில்லை. சில பஸ்களில் திருக்குறள் சரியாக இருப்பது இல்லை. அதைச் சரியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குறிப்பிட்ட குறைகள் ஏதேனும் இருக்குமானால், தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரசுப்பேருந்துகளில் பெண்களுக்கு இடங்கள்

*592 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு ஆன இடத்தினை முதற்பகுதியில் ஒதுக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்களும் பெண்களும் சமம் என்று போராட்டக்குரல் எழுப்பும் இந்த நாட்களில் ஆண்களுக்கு என்று தனி இடமும், பெண்களுக்கு என்று தனி இடமும், இருப்பது பெண்களை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. இந்த முறையை ஒழித்துவிட்டு, எல்லோரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லோரும் சமம் என்ற நிலை தான் என்று இருந்தாலும் இரு வேறு உலகத்து இயற்கை என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். (சிரிப்பு)

திருமதி த. ந. அனந்தநாயகி : பெண்களை விட ஆண்கள் உயர்ந்த வர்கள் என்பதை அரசு அறியுமா? ஆகவே, பெண்களுக்கு பாதி இடம் பஸ்ஸில் ஒதுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெண்களுக்கு பாதியிடமல்ல. முக்கால் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெண்களுக்கு பாதியிடம் பஸ்ஸிலே மட்டுமல்ல, பரமசிவனே ஒதுக்கி இருக்கிறார் (சிரிப்பு).

THIRU K. M. SUBRAMANIAM : Sir, if space is reserved exclusively for ladies like this, what will happen to persons travelling with their family, husband, wife and children? And have they to separate themselves or can they sit together in the other places?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ்ஸிலே போகும்போதாவது பிரிந்து இருக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சக்திக்கு இடது பக்கமும் சிவனுக்கு வலது பக்கமும் இடம் ஒதுக்கியது போல், அரசாங்க பஸ்ஸிலும் இடது பக்கம் பெண்களுக்கும், வலது பக்கம் ஆண் களுக்கும் இடம் ஒதுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்க பஸ்ஸில் இப்போது அந்த முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆண்டவனே பெண்ணைத் தலையில் வைத்துக்கொண்டிருந்தார் என்று புராணம் கூறுகிறது. எனவே தலையாய இடத்தை இந்தப் பேருந்துகளில் அம்மையார் களுக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பஸ்ஸிற்குத் தலை கேரியர் தான்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, நகரப்பேருந்துகளில் நின்றுகொண்டு பயணம் செய்வோர் தொகை எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா? இப்போது மிகவும் நெரிசலாக இருக்கிறதே, அதற்கு ஒரு வரைமுறைப்படுத்த முடியாதா?

1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அவையுரிமைப் பிரச்னை.

அவை உறுப்பினர்கள் பற்றி தரக்குறைவாக "நாத்திகம்" நாளிதழில் வெளியிடப்பட்டது குறித்து

MR. SPEAKER : Under rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, the hon. Member, Thiru Sowdi S. Sundara Bharathi has given notice of a matter of breach of privilege against the Newspaper, 'NATHIGAM'. I gave my consent to the Hon. Member to raise the matter.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Mr. Speaker, Sir, I wish to raise a matter of breach of privilegr against the Tamil Daily 'NATHIGAM' which has in its issue, dated 11th March 1972 published an article criticising the hon. Member Thiru K. Kandasamy for his speech in this House.

MR. SPEAKER : Under rule 188, I have to read the matter to the House and decide whether *prima facie* there is breach of privilege. The matter is as follows :—

"Under rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I wish to raise a matter of privilege against the Editor and publisher of the daily paper "Nathigam".

During the course of General Debate on the Budget in the Assembly on 8th March 1972 the hon. Member, Thiru K. Kandaswamy has referred to—

"அன்று இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எங்களது பெருந் தலைவர் தேவர் அவர்களை வெளியில் விடுவதற்கு முன்னால் ஸ்லோ பாய்சன் என்று சொல்லக்கூடிய, உடனே கொல்லாமல் நாளடைவில் கொல்லக்கூடிய ஸ்லோ பாய்சனைக் கொடுத்து அவரைக் கொல்ல சதி செய்தார்கள்."